


MAALAI NEWS Tamil Daily
RNI.No. TNTAM/2016/69281

# மாலை நியூஸ்

www.maalainews.net

நிறுவனர்/ஆசிரியர் : கெ கதிர்வேல்

மலர் 7 | இதழ் 146 | 30-06-2022 வியாழன் (வெளியீர் 01-07-2022) | 4 பக்கம் விலை | ரூ.3/-

## உள்ளாட்சி இடைத் தேர்தலில் இரட்டை இலை சின்னம்

சென்னை, ஜூன் 30

உள்ளாட்சி இடைத்தேர்தலில் அண்ணா தி.மு.க.வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னம் பெறுவது தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம் எழுதிய கடிதத்தை எடப்பாடி பழனிசாமி திருப்பி அனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான இடைத்தேர்தலை புறக்கணிக்க அண்ணா தி.மு.க. முடிவு செய்துள்ளது.

அண்ணா தி.மு.க.வில் ஒற்றைதலைமை பிரச்சினை வலுத்து வருகிறது. உட்கட்சி பூசல் தொடர்பாக ஒருங்கிணைப்பாளர்கள் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தேர்தல் ஆணையம் மற்றும் நீதிமன்றத்தை அணுகியுள்ளார்கள்.

இதனிடையே தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள கவுன்சிலர், ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர் ஆகிய 510 பதவிகளுக்கு ஜூலை 9 ந்தேதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் 34 பதவிகளுக்கு மட்டுமே கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெற உள்ளதால் வேட்பாளர்களுக்கு மாநில தேர்தல் ஆணையம் இன்று மாலை சின்னங்களை ஒதுக்க உள்ளது. இதற்கிடையே உள்ளாட்சி இடைத்தேர்தலில் சின்னம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியிருந்தார்.

அந்த கடிதத்தில், ‘உள்ளாட்சி தேர்தலில் நமது கட்சியின் வேட்பாளர்கள் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவதற்கு நான் கையெழுத்திட தயார். நீங்களும் கையெழுத்திட்டு அந்த படிவத்தை என்னிடம் அனுப்பவேண்டும்’, என்று குறிப்பிட்டுள்ளார். இருவரும் கையெழுத்திட்டு கொடுக்கும் படிவத்தை ஏற்று இரட்டை இலை சின்னத்தை அண்ணா தி.மு.க.வேட்பாளர்களுக்கு கொடுக்க தேர்தல் ஆணையம் தயாராக இருக்கிறது என கூறியுள்ளார்.

இதனிடையே இந்த கடிதத்தை வாங்காமல் எடப்பாடி பழனிசாமி திருப்பி அனுப்பிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. வேட்பு மனுவில் உள்ள படிவம் ஏ, படிவம் பி படிவத்தில் அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர்கள் கையெழுத்திடாமல் உள்ளதால், அண்ணா தி.மு.க. வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. அதனால் காஞ்சிபுரம் மாநகராட்சியில் 36வது வார்டு, தஞ்சாவூர் மாநகராட்சியில் 8 வது வார்டுகளில் மாவட்ட கவுன்சிலர் பதவி இடங்களுக்கு அண்ணா தி.மு.க. வேட்பாளர்கள் களம் இறங்கவில்லை. தேனி பெரியகுளம் நகராட்சியில் 26வது வார்டு, மயிலாடுதுறை நகராட்சியில் 19வது வார்டுகளிலும் அண்ணா தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியிட முடியாத சூழல் நிலவுகிறது. இதர ஊராட்சி பதவி இடங்களில் அண்ணா தி.மு.க. சார்பில் போட்டியிட்டாலும் அவர்களுக்கு சுயேச்சை சின்னங்களே ஒதுக்கப்பட வாய்ப்பு உள்ளது.

## ராணிப்பேட்டையில்

# ரூ.118 கோடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்





ராணிப்பேட்டை, ஜூன் 30–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (30 ந் தேதி) ராணிப்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.118.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட கலெக்டர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் மற்றும் ரூ.32.18 கோடி செலவிலான 23 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 71 ஆயிரத்து 103 பயனாளிகளுக்கு ரூ.267.10 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் அவர் பேசியதாவது:

புதிதாக உருவாக்கப்பட்டிருக்ககூடிய மாவட்டமாக இருந்தாலும், பல்வேறு பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மாவட்டங்களில் இந்த ராணிப்பேட்டை முன்னணியில் இருப்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன்.

‘மீண்டும் மஞ்சள் பை’ திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டமாக ராணிப்பேட்டை மாவட்டம் இருப்பதை அறிந்து, இந்த மாவட்ட நிர்வாகத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

36 ஆயிரம் பங்களிப்பாளர்களின் பங்களிப்புடன், 3 மணி நேரத்தில் 187 டன் நெகிழிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகப்பெரிய சாதனை. ஏற்கனவே 128 டன் சேகரித்து, ஸ்விட்சர்லாந்து நாட்டில் நிகழ்த்தப்பட்ட உலக சாதனையை முறியடித்திருக்கிறது. இதனால், பல்வேறு சாதனைப் புத்தகங்களில் ராணிப்பேட்டை மாவட்டம் இடம்பெற்றிருக்கிறது. இத்தகைய சாதனை தொடர வேண்டும். இதே போன்ற செயல்பாடுகளில் மற்ற மாவட்டங்களும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 71 ஆயிரத்து 103 பயனாளிகளுக்கு, 267 கோடியே 10 லட்சத்து 9 ஆயிரத்து 302 ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட இருக்கிறது.

இன்றைய நாளில் மட்டும், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கன்னிகாபுரம் பொன்னமங்கலம் சாலையில், செய்யாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் அமைக்கும் திட்டப்பணியும்

*7 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில், புதிய பணிமனைக் கட்டடங்கள் அமைக்கும் திட்டப்பணிகளும்

* ராணிப்பேட்டையில் 10 கோடியே 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி மற்றும் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில், ஆற்காட்டில் கட்டப்படவுள்ள கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டப்பணி என்று மொத்தம் 22 கோடியே 19 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகள், இன்று திறப்புவிழா கண்டிருக்கிறது.

* 118 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

*13 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாலாஜா, சோளிங்கர், ஆற்காடு, கலவை ஆகிய பகுதிகளில், புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் சோளிங்கர், வாலாஜா மற்றும் கலவை வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது.

*5 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஆற்காடு மற்றும் அரக்கோணம் பகுதிகளில், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்

*ஒருகோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள், 2 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 2 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டடங்கள்

* 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வாலாஜா வட்டாரம் லாலாபேட்டை மற்றும் திமிரி வட்டாரம் கலவை ஆகிய பகுதிகளில் துணை வேளாண்மை விரிவாக்கமையக் கட்டடங்கள்

* 5 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 30 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம்

* 5 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அரக்கோணம் வட்டம், அரிகில்பாடி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள, தளமட்ட சுவர் (தடுப்பணை) ஆகியவை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக சொல்வதாக இருந்தால், 150 கோடியே 58 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 24 முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து

தொடர்ச்சி 3 ம் பக்கம்...

## அதிமுக பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் கட்சி பதவிகளை அறிவிக்க வேண்டும்

### மதுரையில் தீர்மானம்




மதுரை, ஜுன்.30–

மதுரையில் அதிமுக பொதுச்செயலாளர் வி கே சசிகலா அவர்களின் ஆதரவாளர்கள் கூட்டம் முன்னாள் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் ஜெ ஆர் சுரேஷ் தலைமையில் மதுரை மாடக்குளம் மெயின் ரோடு எஸ்பி நகர் பிரதான சாலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது! இந்த கூட்டத்தில் அதிமுக நிர்வாகிகள் அதிமுக தொண்டர்கள் என நூற்றுக்கணக்கான அதிமுகாவினர் கலந்து கொண்டனர்.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இரட்டை தலைமையில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு புரட்சிதலைவர் எம்ஜிஆர் சட்டதிட்டங்களுடன் உருவாக்கிய அதிமுக கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருவது வேதனை அளிக்கிறது .

இராணுவபடை போல் இருந்த அதிமுகவை பொதுக்குழுவில் சந்தை கடை போல் மாறி இருப்பது வேதனையான விஷயம். புரட்சித்தலைவரும் புரட்சி தலைவியும் கட்டிக்காத்த இந்த கழகம் இப்போது கோஷ்டி பிரச்சனையால் சீர்பட்டு கிடப்பதற்க்கு காரணமான இரட்டை தலைமை பதவி விலகவேண்டும்.

மேலும் இம்மாதத்தோடு அதிமுக ஒருங்கிணைப்பாளர் பதவி இணை ஒருங்கிணைப்பாளர் பதவி காலவதியாகிவிட்டால் அதிமுகவில் உள்ள அனைத்து பதவியும் காலவதியாகிவிட்டது என்பது நிருமனமாகிவிட்டபடியால் தற்போது கழக பொதுச்செயலாளராக உள்ள புரட்சிதாய்! தொண்டர்களின் காவலர், சின்னம்மா விகே சசிகலா உடனடியாக அனைத்து அதிமுக கட்சி பதவிகளையும பொதுக்குழு உறுப்பினர்கள் செயற்குழு உறுப்பினர்கள் உள்பட அனைத்து கட்சி பதவிகளையும் அறிவிக்க வேண்டும்.

மதுரையில் வி கே சசிகலா ஆதரவுத அதிமுக நிர்வாகிகள் அதிமுக தொண்டர்கள் மதுரை சுரேஷ் தலைமையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. குறிப்பு ஒருசில அறிவாளிகள் அது எப்படி நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது என்று கேட்பார்கள் அவர்களுக்கு பதில் நீதிமன்றத்தில் வழக்கு மேல் முறையீடு நிலுவையில் தான் உள்ளது அதுமட்டுமின்றி அதிமுக ஒரு கோடி தொண்டர்கள் எங்கள் புரட்சி தாய் சின்னம்மா தான் அதிமுகவை தலைமை ஏற்று வழிநடத்த வேண்டும் என்று விரும்புகிறார்கள் பொதுமக்களும் குறிப்பாக பெண்களும் விரும்புகிறார்கள் இதை எல்லாம் நீதிமன்றங்களும் பார்த்து கொண்டுதான் உள்ளது என மதுரை அதிமுக முன்னாள் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

## ஆகஸ்டு 6ந் தேதி துணை ஜனாதிபதி தேர்தல்: தேர்தல் கமிஷன் அறிவிப்பு

புதுடெல்லி, ஜூன்.30

வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் முடிகிறது. ஆகஸ்டு 6ந் தேதி துணை ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் அடுத்த மாதம் 24ந் தேதி முடிகிறது. புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 18ந் தேதி நடக்கிறது.

இந்த தேர்தலில் மத்தியில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் ஒடிசா பழங்குடி இனத்தலைவரும், ஜார்கண்ட் மாநில முன்னாள் கவர்னருமான திரவுபதி முர்மு (வயது 64) போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து முன்னாள் மத்திய நிதி மந்திரி யஷ்வந்த் சின்கா (84) எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக களத்தில் உள்ளார்.

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் ஆகஸ்டு மாதம் 10ந் தேதி முடிகிறது.

புதிய துணை ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்துவது குறித்து தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ் குமார், தேர்தல் கமிஷனர் அனுப் சந்திர பாண்டேயுடன் கலந்தாலோசனை செய்து, முடிவு எடுத்து தேர்தல் கமிஷன் நேற்று அறிவித்துள்ளது.

இந்த தேர்தல், ஆகஸ்டு மாதம் 6ந் தேதி நடக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் ஜூலை 5ந் தேதி தொடங்குகிறது.

வேட்புமனுக்களை தலா 20 எம்.பி.க்கள் முன்மொழியவும், வழிமொழியவும் வேண்டும். வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கு ஜூலை 19ந் தேதி கடைசி நாள் ஆகும். வேட்புமனுக்கள் பரிசீலனை 20ந் தேதி நடைபெறுகிறது. வேட்புமனுக்களை திரும்பப்பெறுவதற்கு 22ந் தேதி கடைசி நாள் ஆகும்.

போட்டி இருந்தால் ஆகஸ்டு 6ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். அன்றைய தினமே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். புதிய துணை ஜனாதிபதி ஆகஸ்டு மாதம் 11ந் தேதி பதவி ஏற்பார். இந்த தேர்தலில் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை எம்.பி.க்கள் ஓட்டு போடுவார்கள்.

543 எம்.பி.க்களை கொண்ட நாடாளுமன்ற மக்களவையில் பா.ஜ.க. கூட்டணிக்கு 336 எம்.பி.க்கள் உள்ளனர். 245 இடங்களைக் கொண்ட மாநிலங்களவையில் 117 எம்.பி.க்கள் இருக்கிறார்கள். இரு சபைகளிலும் சேர்த்து மொத்தம் 788 எம்.பி.க்கள் உள்ளனர். இதில் பா.ஜ.க. கூட்டணிக்கு 453 எம்.பி.க்கள் உள்ளனர். இது தவிர பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெறாத ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ், பிஜூ ஜனதாதளம் போன்ற கட்சிகள் பா.ஜ.க. கூட்டணிக்கு ஆதரவு அளிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஏற்கனவே இரு சபைகளிலும் சேர்த்து பாதிக்கும் மேற்பட்ட எம்.பி.க்களை கொண்டுள்ள நிலையில் பா.ஜ.க.கூட்டணி வேட்பாளர் வெற்றிபெறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் 3 நாட்கள் கனமழை தொடரும் வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை: ஜுன்.30–

தமிழகத்தில் 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: மேற்கு திசைகாற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் பல இடங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழை 3 நாட்களுக்கு தொடரும். தமிழகத்தில் 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, ஈரோடு, திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நாளை (1ந்தேதி) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யலாம். நாளை மறுநாள் (2ந்தேதி) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மிதமான மழை பெய்யலாம். தமிழகத்தில் அதிகபட்சமாக காவேரிபாக்கத்தில் 6 செ.மீ, திருத்தணியில் 5 செ.மீ., வால்பாறையில் 4 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முன்னாள் முதல்வர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே பழனிச்சாமி ஆட்சியில் திருப்பூர் வடக்கு தொகுதி. வேலம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காலி இடத்தில் தமிழ்நாடு அரசு நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிறுவனத்தின் உதவியுடன் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் மருத்துவமனை கட்டிடத்தை திருப்பூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார் எம்எல்ஏ பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் நீலகர் நகர் சுப்பு. மாவட்ட மாணவரணி செயலாளர் சரீஷ். வேலம்பாளையம் கூட்டுறவு சொசைட்டி தலைவர் வீகேபி மணி. வார்டு செயலாளர் ரவி. முன்னாள் கவுன்சிலர் செந்தில்குமார். பகுதி கழக நிர்வாகிகள் முருகேஷ். வாணி. மணி. பாத்திர சொசைட்டி துணைத்தலைவர் குணசேகர். மாவட்ட எம்ஜி ஆர் அணி தனபால். மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் கேபிள் சீனிவாசன். ஜீவா கணேசன்னன். கிளை நிர்வாகிகள் ஆனந்த். வெள்ளியங்கிரி. சாமி. ரேவதி. வடிவேல். மற்றும் மருத்துவ அலுவர் டாக்டர் ரேகா உள்ளிட்டோர் இருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், சாத்தனஞ்சேரி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் திரளானோர் பார்வையிட்டனர்.



செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகள், அரசு திட்டங்கள் அமைச்சர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கண்டமங்கலம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர்ஜிவால், வாகனங்களில் ஹாரன்கள் தேவையில்லாத இடங்களில் ஒலிப்பதன் மூலம் ஒலி மாசு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, ஒலி மாசு விழிப்புணர்வுவாரத்தை துவக்கிவைத்தார். அதன்பேரில், 27.06.2022 முதல் 03.07.2022 வரையில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அதிகாரிகள் தலைமையில், போக்குவரத்து ஆளிநர்கள் மூலம் சென்னை பெருநகர் முழுவதும் ஒலிமாசு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுவருகிறது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத் மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ் தலைமையில் நடைபெற்றது. அருகில் இணை இயக்குநர் முகைதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நாச்சியார் ஆகியோர் உள்ளனர்.

விளம்பரத் தொடர்புக்கு
97156 45033
81909 33331

# மாலை நியூஸ்

## தலையங்கம்

### அதிரடி...

தமிழ்நாட்டில் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன. இந்த கோயில்களுக்குச் சொந்தமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் உள்ளன. கோயில்களின் நிலங்கள் கடந்த அதிமுக ஆட்சியின்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாகவும், குறிப்பாக பல முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் பல்வேறு புகார்கள் எழுந்தன. இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; கோயில் சொத்துகளை மீட்கவேண்டும் என பக்தர்கள், ஆன்மிக அமைப்பினர், பொதுமக்கள் பலரும் வலியுறுத்தினர். அதேபோல பல கோயில் இடங்களில் உரிய வாடகை செலுத்தாமலும் எவ்வித முறையான ஒப்பந்தங்கள் இல்லாமலும் புகார்கள் எழுந்தன.

இதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, கோயில் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டது. அதன்பின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்பார்வையில், அறநிலையத்துறைக்கு சொந்தமான, ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்கள் அதிரடியாக மீட்கப்பட்டு வருகின்றன. ஆலய நிலங்கள் மீட்பதற்கு என 38 தனி தாசில்தார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி கோயில் ஆக்கிரமிப்பு நிலத்தை குறித்து அறிந்த எந்த ஒரு நபரும் புகாரளித்து வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கோயில் சொத்துகளை சட்டப்படியான உரிமையின்றி அனுபவித்து வரும் நபர்களைக் கண்டறிந்து கோயில் நிர்வாகிகள் விழிப்புணர்வுடன் செயல்பட்டு விவரங்கள் ஆக்கிரமிப்புதாரர்கள் மீது காவல் நிலையத்தில் புகாரளித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புதாரர்களுக்கெதிராக காவல் நிலையத்தில் அளிக்கப்படும் புகாரினை மீதான விசாரணைக்குத் தேவையான ஆவணங்களையும், முழுமையான ஒத்துழைப்பையும் போலீசாருக்கு வழங்கிட வேண்டுமெனவும் கோயில் நிர்வாகிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே பூவாண்டிபட்டியில் ஆவுடையநாயகி அம்மன் சமேத தேசிகநாதர் சுவாமி கோயில் நிலங்களை மீட்கவேண்டும் என கடந்த 2017ம் ஆண்டு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. ஆலய நிலங்கள் மீட்பு தொடர்பாக தமிழகத்திலேயே முதன் முதலில் போடப்பட்ட வழக்கு இதுதான். இந்து சமய ஆணையர் சட்டப்பிரிவு 78ன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோர்ட் உத்தரவிட்டது. இதையடுத்து ஆணையரின் உத்தரவின்படி ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டன. இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் அரசு அதிகாரிகள் ரூ.1 கோடிக்கு மேல் மதிப்புள்ள 26.53 ஏக்கர் கோயில் நிலத்தை மீட்டனர்.

இதுபோல, கோயில் நிலங்களை ஆக்கிரமித்தவர்கள் அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது வழக்குப்பதிவும் செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட 540.39 ஏக்கர் நிலம், 496 கிரவுண்ட் மனைகள், 20 கிரவுண்ட் கட்டிடங்கள் மீட்கப்பட்டுள்ளன. 46 கிரவுண்ட் திருக்குளக்கரை நிலமும் மீட்கப்பட்டுள்ளது. 991 ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கோயில் நிலங்களின் மதிப்பு ரூ.2 ஆயிரம் கோடி என கடந்த பிப்ரவரி மாதம் அரசு அறிவித்திருந்தது. திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டிலேயே, அறநிலையத்துறைக்கு சொந்தமான பல கோடி மதிப்பிலான ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் விதிமுறைகளை மீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கோயில் நிலங்களை மீட்க தமிழக அரசு இன்னும் தீவிரமாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஒவ்வொரு திட்டத்திலும், செயல்பாடுகளிலும், அதிரடி நடவடிக்கைகளிலும், இது அனைத்து தரப்பு மக்களுக்கானது அரசு என்பதை மீண்டும் அழுத்தமாக நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

## தஞ்சை அண்ணா நூற்றாண்டு அரங்கில்

# அண்ணா கலை விருது கலையரசு பட்டமளிப்பு விழா



தஞ்சை, ஜுன்.30–

தஞ்சாவூர் காவிரி அன்னை கலைமன்றம் வழங்கும், பேரறிஞர் அண்ணா கலை விருது கலையரசு பட்டமளிப்பு விழா, தஞ்சை அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தஞ்சை மாநகராட்சி மேயர், சண்.ராமநாதன் தலைமை தாங்கினார்.

திராவிட கழக மாவட்ட தலைவர், வழக்கறிஞர்.அமர்சிங் முன்னிலை வகித்தார். தஞ்சை காவேரி அன்னை கலை மன்றம் ஆலோசகர் ஆழி.அரங்க.அயப்பராஜ் வரவேற்புரையாற்றினார். திருச்சி நாடக இயக்குனர், வி.ஏ. பேட்டரிக், தஞ்சை நாடக இயக்குனர் மரியலூர் துராஜ், பரசைபுறம், நாடககலைஞர். பரசை பாலா, ஆகியோருக்கு பேரறிஞர் அண்ணா கலை விருது வழங்கப்பட்டது.

ஆடுதுறை பாட்டரங்க,, பட்டிமன்ற நடுவர், அழகு பன்னீர் செல்வத்திற்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது. தஞ்சை தலைமை மருத்துவர் அறுவை சிகிச்சை நிபுணர், கலை மாமணி, சு. நரேந்திரன், மேனாள் மாவட்ட குழு உறுப்பினர் மற்றும் பெரிய கோவில் சதய விழாக்குழு தலைவர் செல்வம், பெரிய கோவில் சதைவிழா குழு துணைத்தலைவர் மேத்தா, கழக விவசாய அணி துணை செயலாளர் எஸ்.ஜித்து, திராவிட கழக கிராமப்புற பிரச்சார குழு அமைப்பாளர் முனைவர்.அதிரடி, க. அன்பழகன் ஆகியோர் பாராட்டுரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியின் நிறைவாக தஞ்சை காவேரி அன்னை கலை மன்ற நிறுவன தலைவர், மா.வீ.முத்து நன்றி கூறினார். அன்று மாலை 5 மணி அளவில், 11ஆம் நாள் நிகழ்ச்சியாக, ஈரோடு கலைவேங்கை கலைக்கூடம் வழங்கும், "குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்" சமூக நாடகமும், இரவு 9 மணியளவில், கோவை கலாலயம் வழங்கும், "கொரோனா குடும்பம்" நாடகமும் அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியத்திற்குட்பட்ட மெய்யூர் ஊராட்சியில் பல ஆண்டுகளாக குடிநீர் வசதி இன்றி இருந்த அரசு பள்ளியில் மெய்யூர் ஊராட்சி மன்ற தலைவர் தமிழரசன் என்கிற ஸ்டாலின் முயற்சியால் குடிநீர் வசதி ஏற்படுத்தி, பள்ளி மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் இருந்த கழிப்பறை சுத்தம் செய்து வண்ணம் பூசி மாணவர்கள் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மெய்யூர் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்டாலின் சிறப்பான சமூக சேவைகளை செய்து வருகிறார் மதுராந்தகம் ஊராட்சியில் மெய்யூர் ஊராட்சி சிறப்பாக செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது .மெய்யூர் ஊராட்சி பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# தூத்துக்குடியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 'கல்லூரி கனவு' நிகழ்ச்சி

தூத்துக்குடி, ஜுன்.30–

தூத்துக்குடியில் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், பிளஸ்2 பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில், 'கல்லூரிகனவு' என்ற நிகழ்ச்சி தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட மாணிக்கம் மஹாலில் நடைபெற்றது. இதில், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், திமுக மகளிரணிச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி, மற்றும் முன்னாள் இஸ்ரோ தலைவர் சிவன், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.



இதனையடுத்து, பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு உயர்கல்வியை தேர்வுசெய்வதில் உள்ள வாய்ப்புகள் குறித்த மாணவ, மாணவியர்களின் கேள்விகளுக்கு சிவன் பதிலளித்தார். முன்னதாக, இந்திய வனத்துறை பணிக்கான தேர்வு 2021ல் 57வது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ள, தற்போது தூத்துக்குடி கோட்டத்தின் திருச்செந்தூர் ரேஞ்ச் வனச்சரகராகப் பணிபுரியும் ஜி.சுப்புராஜுக்கு பொன்னாடை போர்த்தி தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

கனிமொழி கருணாநிதி எம்பி உடன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறுப்பாளருமான கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்கண்டேயன், எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ, மாவட்ட வனத்துறை அலுவலர் அபிஷேக் தோமர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி வளர்ச்சிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## மேயர் என்.பி.ஜெகன் வேண்டுகோள்

தூத்துக்குடி, ஜுன்.30–

தூத்துக்குடி மாநகராட்சியின் கூட்டம் இன்று நடைபெற்றது. அதற்கு, மேயர் ஜெகன் பெரியசாமி தலைமை வகித்தார். துணைமேயர் ஜெனிட்டா, ஆணையர் சாருஸ்ரீ ஆகியோர் முன்னிலை வகித்தனர். கவுன்சிலர்கள் தங்களது பகுதிகளுக்கு தேவையானது குறித்து பேசினார்கள். அப்போது மேயர் பேசுகையில்,"அனைத்து பகுதிகளும் முழுமையாக ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் விரைவில் பணிகள் முடிவு பெறவுள்ளன. அதே போல் மாநகரில் பள்ளி செல்லும் குழந்தைகள் பகுதிகளில் புதிய தார்சாலைகள் அமைக்கப்படவுள்ளது. அனைவருடைய பகுதிகளிலும் அனைத்து பணிகளும் முழுமையாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்களுக்கு கவுன்சிலர் மூலம் குடிதண்ணீர் வரும்நேரம் தெரிவிக்கப்படுகிறது. வரும் 1ம் தேதி முதல் அதேபோல் குப்பை எடுப்பதற்கான வாகனம் எந்த பகுதிக்கு எப்போது வரும் என்ற தகவல் கவுன்சிலர்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து கொடுப்பதற்கு பொதுமக்களிடம் கவுன்சிலர்கள் சொல்லவேண்டும். புறநகர் பகுதியின் வளர்ச்சிக்கும் முழுமையான பல ஒப்பதங்கள் போடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கும் 2023க்குள் அனைத்தும் முழுமை பெறும் வகையில் அதிகாரிகளும் பணிசெய்துவருகின்றார்கள். மாநகராட்சி பகுதிகளில் அனுமதியின்றி டிஜிட்டல் போர்டுகள் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு சென்றால் எனது பெயரையும் கவுன்சிலர் பெயரையும் பயன்படுத்துவதாக சொல்கிறார்கள். தேவையற்ற விளம்பர பதாகைகள் அரசு சுவர்களில் ஒட்டுவதையும் தவிர்ப்பதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். நானும் மாநகரின் வளர்ச்சிக்கு இரவு பகல் பாராமல் உழைத்துக்கொண்டிருக்கிறேன். என்னோடு நீங்களும் மாநகராட்சி வளர்ச்சிக்காக இனைந்து வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தார். கூட்டத்தில் 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் வக்கீல் பாலகுருசாமி, அன்னலட்சுமி, நிர்மல்ராஜ், கலைச்செல்வி, மாநகராட்சி பொறியாளர் ரூபன்சுரேஷ் பொன்னையா, உதவி பொறியாளர்கள் சரவணன், பிரின்ஸ், உதவி ஆணையர்கள் சேகர், தனசிங், காந்திமதி, கவுன்சிலர்கள் கீதாமுருகேசன், சரவணக்குமார், விஜயகுமார், ராமர், கண்ணன், ஜாக்குலின்ஜெயா, வைதேகி, தனலட்சுமி, பவானி மார்ஷல், மெட்டில்டா, சரண்யா, தெய்வேந்திரன், கந்தசாமி, சுயம்பு, பச்சிராஜ், ராஜதுரை, ரெங்கசாமி, மும்தாஜ், முத்துமாரி, ஜான், ஜாண்சிராணி, ராமும்மாள், ரிக்டா, பேபிஏஞ்சலின், சந்திரபோஸ், கற்பககனி, நாகேஸ்வரி, ஜெயசீலி, எடின்டா, பொன்னப்பன், சரண்யா, சோமசுந்தரி, மேயர் நேர்முக உதவியாளர் ரமேஷ், ஆணையர் நேர்முக உதவியாளர் துரைமணி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் எளம்பலூர் சாலை உப்போடையில்

# ஜூலை 6 ந்தேதி ஸ்ரீ நாகமுத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

பெரம்பலூர், ஜுன், 30–

பெரம்பலூர் எளம்பலூர் சாலையில் உள்ள உப்போடை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ நாகமுத்துமாரியம்மன், ஸ்ரீ செல்வகணபதி, ஸ்ரீ பாலமுருகன் ஸ்ரீ முனீஸ்வரன் ஆகிய தெய்வங்களுக்கு கோயில் கமிட்டி குழுவினர் மற்றும் தர்மகர்த்தா, அதன் நிர்வாகிகள் கோவில் புணரமைப்பு பணிகளுக்காக பொதுமக்களிடம் நன்கொடை வசூல் செய்து புனரமைப்பு பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டதால் கும்பாபிஷேகத்திற்கு தயாராகிவருகிறது.



அதன்படி ஜூலை 4 ந்தேதி திங்கட்கிழமை யாகசாலைபூஜைகள் தொடங்குகிறது. அன்று பிற்பகல் மூன்றுமணிக்குமேல் சக்தி அழைக்கும் இடத்தில் 108 தீர்த்தக்குடங்களும், 108 முளைப்பாரியும் பக்தர்களால் மேளதாளங்கள் முழங்க உடுக்கை சப்தம் ஒலிக்க யாகசாலைக்கு கொண்டுவரப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து ஜூலை 5 ந்தேதி செவ்வாய்கிழமை இரண்டாம் மற்றும் மூன்றாம் கால யாக பூஜைகளும். ஜூலை 6 ந்தேதி நான்காம் கால யாக பூஜை, பூர்ணாஹூதி, கும்பங்கள் புறப்பாடு நடைபெறுகிறது. அதனைத்தொடர்ந்து காலை 6.45 மணி முதல் 7.25 மணிக்குள் மகாகும்பாபிஷேகம் ஊர் பொதுமக்கள் மற்றும் .சிவாச்சாரியார்கள், வேதமந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகத்தை ஊர் பொதுமக்கள் நடத்திவைக்கின்றனர். கும்பாபிஷேகத்தன்று அன்னதானம் வழங்கப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு பிறகு தற்போதுதான் அருள்மிகு உப்போடை ஸ்ரீ நாகமுத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதால் அதனை காண வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அதற்கான முன்னேற்பாடு பணிகள் தற்போது நடைபெற்றுவருகிறது கிராம பொதுமக்கள் கும்பாபிஷேக பணிகளை செய்துவருகின்றனர்.



மதுரை விரகனூர் வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பள்ளிக்கல்வித்துறை சார்பாக 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 'கல்லூரி கனவு' என்ற தலைப்பில் மாணவ மாணவியர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்அருகில் மாவட்ட ஆட்சியர் அணிஷ் சேகர் உள்ளார்



மதுரை மாவட்டம் கள்ளிக்குடி வட்டம் வில்லூர் அருகே உவரி பெரிய கண்மாய் கலிங்கில் 500 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு கண்டறியப்பட்டதுவில்லூர் சேர்ந்த சமூக ஆர்வலர் பாலமுருகன் கொடுத்த தகவல்படி மதுரை சரசுவதிநாராயணன் கல்லூரி முதுகலை வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர். பாண்டியநாடு பண்பாட்டு மைய தொல்லியல் கள ஆய்வாளர் வரலாற்று முனைவர். முனீஸ்வரன் தலைமையில் வரலாற்று ஆர்வலர்கள் அனந்த குமரன். தங்கப்பாண்டி . அஜய் ஆகியோர் உவரி பெரிய கண்மாயில் கள ஆய்வு மேற்கொண்ட போது கண்மாய் நீர் நிரம்பி வெளியேறும் கலிங்கு பகுதியில் லிங்க வடிவம் தனி தூணில் கல்வெட்டு பொறிக்கப்பட்டு இருந்தது. இக்கல்வெட்டை மை படி எடுத்து ஆய்வு செய்தபோது கி.பி 16 நூற்றாண்டை சேர்ந்த நீர் பங்கீடு முறை கல்வெட்டு என்பதை கண்டறிந்தனர்




மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவர் திருக்கோயில் துணைஆணையர்செயல் அலுவலர் அருணாசலம் முன்னிலையில் இத்திருக்கோயில் மற்றும் 10 உபகோயில்களின் உண்டியல் திறப்பு நடைபெற்றது. உண்டியல் திறப்பின்போது கள்ளழகர் திருக்கோயில் துணை ஆணையர் கோயிலின் தக்கார் பிரதிநிதி. கண்காணிப்பாளர். மதுரை இந்து சமய அறநிலையத்துறை வடக்கு. கள்ளிக்குடி ஆய்வர்கள்.கோயில் பணியாளர்கள். மற்றும் வங்கி பணியாளர்கள் கலந்துகொண்டனர். உண்டியல் திறப்பின் பொழுது ரொக்கம் ரூ. 98.97.461 (ரூபாய் தொண்ணூற்றி எட்டு இலட்சத்து தொண்ணூத்தி ஏழாயிரத்து நானூற்றி அறுபத்தி ஒன்று மட்டும்). பலமாற்று பொன் இனங்கள் 780 கிராம். பலமாற்று வெள்ளி இனங்கள் 745 கிராம் மற்றும் அயல்நாட்டு நோட்டுகள் 225 எண்ணம் வரப்பெற்றுள்ளது.

# எடப்பாடி பழனிசாமி அதிமுக பொதுச்செயலாளராக பதவி ஏற்பார்

## முன்னாள் அமைச்சர் பி.வி. ரமணா உறுதி



திருவள்ளூர், ஜுன் 30–

11 ந் தேதி நடைபெறும் அண்ணா தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்பது உறுதி என்று திருவள்ளூர்மேற்குமாவட்ட அண்ணாதி.மு.க.செயலாளர் பி.வி. ரமணா கூறினார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அண்ணாதி.மு.க. சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.வி.ரமணா தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக்கூட்டத்தின் போதுவிடுதலைசிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து .வி.ரமணா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அண்ணா திமுக தொண்டர்கள், கழக நிர்வாகிகள்,பொறுப்பாளர்கள் அனைவருமே எடப்பாடி பழனிச்சாமி தான் ஒற்றைத் தலைமைஏற்கவேண்டும்என விரும்புகிறார்கள்.தற்போது பொதுக்குழுஉறுப்பினர்கள் பெரும்பாலானோர் எடப்பாடி பக்கம் தான் உள்ளனர்.11ந்தேதிநடைபெற உள்ள பொதுக்குழுவில் எடப்பாடி பழனிசாமி பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்பதுஉறுதிஎன்றுகூறினார்.

இந்தநிகழ்ச்சியில்மாவட்ட அவைத்தலைவர்இன்பநாதன், ஒன்றிய செயலாளர்கள் சக்திவேல்,சுதாகர்,மாதவன், சீனிவாசன், குமார், ரவி, மற்றும் திருவள்ளூர் நகர செயலாளர் கந்தசாமி, பேரூராட்சிசெயலாளர்கள் ரவிச்சந்திரன், ஜெயவேலு, பொதுக்குழுஉறுப்பினர்கள் ஆர்.டி.இ. சந்திரசேகர், இளங்கோவன் மற்றும் நிர்வாகிகள் வேல்முருகன், ஜோதி,ராஜி,தியாகுஉள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆன்மீக செய்திகளுக்கு திருவடி
இணைய தளத்தை பார்க்க www.thiruvadi.in



சென்னை பெருநகர காவல் ஆணையாளர் கடந்த மே மாதம் நட்சத்திர காவலர் விருதுக்கு தேர்வுசெய்யப்பட்ட பெண் தலைமை காவலர் அன்னலஷ்மியை நேரில் அழைத்து நட்சத்திர காவலர் விருதுக்கான பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூ.5 ஆயிரம் ரொக்கப் பணம் வழங்கி பாராட்டினார்.

# திமுகவில் சேரப் போகிறேன் என வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை

## டாக்டர் சரவணன் விளக்கம்



மதுரை, ஜுன்.30–

மதுரை மாநகர் பாரதிய ஜனதா கட்சியின்மாவட்டத் தலைவராகஉள்ளார் டாக்டர் சரவணன்இவர் கடந்த அதிமுக ஆட்சி இடைத்தே ர்தலில் திருப்பரங்குன்றம்தொகுதியில் திமுகசார்பில்போட்டியிட்டு வெற்றி பெற்றார்மதுரையில் உள்ளதிமுககட்சியினர்கிடையே கருத்துவேறுபாடுகள்காரணமாக திமுகவிலிருந்து விலகி பிஜேபியில்இணைந்து மதுரை மாவட்ட தலைவராகபொறுப்பேற்றார் கட்சிப் பணிகளில்தீவிரமாக கவனம்செலுத்தி வரும்வேலையில்தனக்கு பிடிக்காத யாரோ திமுகவில்சேரப்போகிறார் என சமூகவலைதளங்களில்தகவல் பரவி வருகின்றன இதனால் மதுரை பிஜேபியினர் இடையே அதிர்ச்சி ஏற்பட்டு வருகிறதுஅதன் காரணமாகடாக்டர் சரவணன் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் நான் பாஜக கட்சியில் மதுரை மாவட்ட தலைவராக செயல்பட்டு கொண்டிருக்கிறேன் தமிழகத்தில் எங்களது மாநிலத்தலைவர் அண்ணாமலை தலைமையிலும் மதுரை மாவட்டத்தில் எனது தலைமையில் பாரதிய ஜனதா கட்சி அபார வளர்ச்சி பெற்று வருகிறது இந்த நிலையில் ஆளும் கட்சி திமுகவில் சேரப்போவதாக யாரோ வதந்தி பரப்புகின்றனர் நான் திமுகவில் சேர போவதில்லை சமூக வலைதளங்களில்வெளியான தகவல் முற்றிலும் தவறானது நான் திமுக உள்ளிட்ட எந்த கட்சியில் சேர மாட்டேன் எனது பணி பிஜேபியில் தொடரும் என டாக்டர் சரவணன் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்

# சோழவந்தான் அரசு மருத்துவமனைக்கு ஈஜிசி உபகரணம் வழங்கல்



மதுரை, ஜுன்.30

மதுரை மாவட்டம் சோழவந்தான் நகரின் மத்தியில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. சோழவந்தான், கருப்பட்டி, இரும்பாடி, மன்னாடி மங்கலம், குருவித்துறை, திருவேடகம்,காடுபட்டி,தென்கரை,முள்ளிப்பள்ளம் உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் இதை பயன்படுத்தி வருகின்றனர். இந்த அரசு மருத்துவமனையில் இஜிசி உபகரணம் இல்லாததால் மதுரைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு இருந்தது. இதனை கருத்தில் கொண்டு மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் பாலமுருகன், ராஜேஷ் கண்ணா ராம்குமார் உள்ளிட்டோர் இலவசமாக வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் ஜெயராமன் முன்னிலை வகித்தார். அரசு தலைமை மருத்துவர் தீபா பெற்றுக்கொண்டார். நிகழ்வில் மருத்துவர் சுபா முத்துலட்சுமி, செவிலியர்கள் ரேணுகா, ஜெய கௌரி ,மருந்தாளுநர் முத்துராஜ், பேரூராட்சி கவுன்சிலர்கள் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ், குருசாமி, செல்வராணி, முத்துச்செல்வி சதீஷ், முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் மணிராஜ், திமுக நிர்வாகிகள் மில்லர் ஆட்டோ மார்நாடு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாலை நியூஸ்
உலக வலைதள வரலாற்றில்
உள்ளூர் செய்திகள் முதல்
உலக செய்திகள் வரை...
www.maalainews.net



கோவை மாவட்டம் ஆனைமலை தாலூகா கோட்டூரில் தாசில்தார் பானுமதி தலைமையில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் முகாம் நடைபெற்றது. சிவில் சப்ளை தாசில்தார், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் பயனாளிகளுக்கு தேவையான சான்றிதழ்களை வழங்கினார்கள்



முதல்வர் மு.க.ஸ்.ஸ்டாலின் இராணிப்பேட்டை காரைக்கூட்ரோட்டில் உள்ள குழந்தைகள் இல்லத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்

# ராணிப்பேட்டையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்...

1 ம் பக்க தொடர்ச்சி

வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல,தோல் மற்றும் காலணி உற்பத்தித் தொழிலில்,ராணிப்பேட்டை மாவட்டம் சிறந்து விளங்குகிறது.காலணி மற்றும் அது சார்ந்த பொருட்களின் உற்பத்தியை, சர்வதேசத் தரத்திற்கு மேலும் உயர்த்தி, அதிகவேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இப்போது நான் ஒரு புதிய அறிவிப்பை மகிழ்ச்சியோடு வெளியிடப் போகிறேன்.

* பனப்பாக்கத்தில், 400 கோடி ரூபாய் செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் மெகா காலணி உற்பத்தி பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

நேற்று மாலை வேலூரில் நடைபெற்ற அரசு விழாவில், அமைச்சர் துரைமுருகன் எடுத்துவைத்த அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு,காட்பாடியில் சிப்காட் அறிவித்தேன். இன்று ராணிப்பேட்டையில் இந்தப் பூங்காவை அறிவித்திருக்கிறேன்.

இதனால், சர்வதேச அளவில்,தலைசிறந்தகாலணி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாகராணிப்பேட்டை மாவட்டம் மேலும் வலுப்பெறும்.இந்தப்பூங்கா நிறுவப்படும்காரணத்தால்,20 ஆயிரம்பேருக்கு,குறிப்பாக பெண்களுக்குவேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த ஓராண்டு காலத்தில், கழக அரசின் சார்பாக,ராணிப்பேட்டை மாவட்ட மக்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள நன்மைகளையும், இந்த நேரத்தில்நான்நினைவூட்டுவது என்னுடைய கடமையாக, பொருத்தமாகக்கருதுகிறேன் என்று குறிப்பிட்ட முதல்வர், அதைப் பட்டியலிட்டுக் காட்டினார்.இவைஎல்லாம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அல்ல,செய்துமுடிக்கப்பட்ட திட்டங்கள்.'இவைஅனைத்தும் ஓராண்டுகாலத்தில்,'செய்து முடிக்கப்பட்ட' திட்டங்கள்.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் ஏறக்குறைய 70 சதவீதம், 80சதவீதம்நாம்நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொன்னால், இவை அனைத்தையும்,தாண்டிய அளவில்நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள். அதனால்தான் உங்கள் முன்னால் இன்றைக்கு கம்பீரமாக நான் நின்று கொண்டு இதை தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

இதேராணிப்பேட்டையில், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்றதலைப்பில்,நடைபெற்ற நிகழ்ச்சியில் உங்களை எல்லாம்வந்து சந்தித்தேன். மனுக்களைப் பெற்றேன். அனைவரதுகோரிக்கையையும் கேட்பதற்காக அன்றைக்கு வந்தேன்.பலர்எனதுகையில் மனுக்களைகொடுத்தீர்கள். அதில் சில பேர்களை நான் பேசவைத்தேன்.அப்போது சிலநரிக்குறவர்கள்பெண்கள், அதிலும்குறிப்பாகபெண்கள் மேடைக்கு பக்கத்தில் வந்து, நாங்களும் பேச வேண்டுமென்றுகேட்டார்கள். பேசவைத்தோம்.அவர்கள் கோரிக்கையைக்கவனமாகக் கேட்டேன்.

ஆட்சிக்கு வந்ததும் அதையெல்லாம் மறந்து விடவில்லை என்பதன் அடையாளமாகத்தான், தற்போது பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்தும் வருகிறோம்.

இன்றைக்கு293நரிக்குறவர் இன மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ராணிப்பேட்டை விழாவிலேயே இருளர் பழங்குடியினர் மக்களுக்கு அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று நலத்திட்ட உதவிகள் பெறக்கூடியநபர்களில்,5,767 பேர் இருளர் இன மக்கள். இந்த மாவட்டத்தில் உள்ள 9 ஆயிரத்து 600 இருளர் பழங்குடியின மக்களில், 5,767 இருளர் பழங்குடியினர் இன மக்களுக்கு இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவிருக்கிறது. அதேபோல்திருநங்கையர் 20 பேருக்கும்நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவிருக்கிறது.

9,522 மாற்றுத் திறனாளிகளுக்கு15கோடியே 89 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் செய்யப்படவிருக்கிறது. 101மாற்றுத்திறனாளி மற்றும் சிறப்புக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய இலவசத்தையல்இயந்திரங்கள் வழங்கி, அவர்கள் மூலமாக, குறைந்த விலையில் மஞ்சள் பைகள் தயாரித்து விநியோகத்திட,நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்தஅரசாங்கத்தினுடைய இதயம் என்பது இத்தகைய விளிம்புநிலை மக்களின் மகிழ்ச்சியில்தான்இருக்கிறது. பழங்குடியின மக்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுப்பதும், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைஉருவாக்குவதற்கு இணையானது! இவை விளம்பரத்துக்காகச் செய்யப்படுவது அல்ல.

பிள்ளைகளுக்குக் கொடுக்கும்புத்தகப்பைகளில், கடந்த ஆட்சியைப் போல, முதலமைச்சரான நான் எனது படத்தை போட்டுக் கொண்டு இருந்தால், அதை விளம்பரம் என்று சொல்லலாம். கழக ஆட்சி கடந்த ஆண்டுபொறுப்புக்கு வந்தபோது,நீங்கள்மறந்திருக்க மாட்டீர்கள். பள்ளிக்கல்வித் துறைசார்பில்,கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய முதலமைச்சர்களின் படத்தை அச்சிட்டுத்தயாரிக்கப்பட்ட பைகள் இன்னமும் மீதம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று அமைச்சர்,அதிகாரிகள் என்னிடத்தில் வந்து சொன்னார்கள். நான் உடனேசொன்னேன்.அதைப் பயன்படுத்தாமல்போனால், 17 கோடி ரூபாய் அரசுக்கு வீண் இழப்பீடு ஏற்படும், செலவு ஏற்படும், பணம் வீணாகும்,"பரவாயில்லை, முன்னாள் முதலமைச்சர்கள் படமேஇருக்கட்டும்" என்று சொல்லி. அந்தப்பைகளைக் கொடுக்கச்சொன்னவன்தான் இந்த ஸ்டாலின் என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

விளம்பரங்கள் எனக்குத் தேவையில்லை. ஏற்கனவே கிடைத்த புகழையும்பெருமையையும் காலமெல்லாம்கரையாமல் காப்பாற்றினால் போதும் என்று நினைப்பவன் நான்.

*'திராவிடமாடல்' என்று சொன்னால்,காலமெல்லாம் இந்தஸ்டாலின் முகம்தான் நினைவுக்கு வரும்!

* இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்றுசொன்னால்போதும்! என் குரல் நினைவுக்குவரும் உங்களுக்கு!

* 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை இந்தியா முழுமைக்கும் கொண்டு சேர்த்தது யார்? என்றால், என் முகம்தான் நினைவுக்கு வரும்!

*அனைத்துச்சாதியினரும் அர்ச்சகர்என்பது,யார் ஆட்சிக் காலத்தில்அமலானது?என்று கேட்டால்,என் முகம் தான் நினைவுக்கு வரும்.

* தமிழ்நாட்டின் அம்பேத்கரானபெரியாருக்கும், இந்தியாவின் பெரியாரான அம்பேத்கருக்கும்,அவர்களது பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும், சமத்துவ நாளாகவும் அறிவித்தது யார்? என்றால்,என் பெயர் தான் நினைவுக்கு வரும்.

* கையில் காசு இல்லை என்றாலும்போகவேண்டிய இடத்திற்குபோய்ச்சேரலாம் என்ற நம்பிக்கையுடன், பேருந்துகளில் ஏறும் பெண்களுக்கு எந்நாளும் என் முகம்தான் நினைவுக்கு வரும்.நான்என்றுசொல்வது தனிப்பட்ட இந்தஸ்டாலின் என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.நாம்அனைவரும் சேர்ந்தகூட்டுக்கலவைதான் நான்.

என்றும் உங்களில் ஒருவன் தான் நான்! முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால் மட்டும் நான் அல்ல! உங்கள் அனைவரது சேர்க்கையாக நான் அமர்ந்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து நடத்தும் ஆட்சிதான் இது! நமக்கான ஆட்சிதான் இது!

இந்த ஆட்சியானது கடந்தபத்தாண்டுகாலமாக, தமிழ்நாட்டில்ஏற்பட்டுள்ள சரிவைச் சீர் செய்து கொண்டிருக்கிறது.பள்ளத்தை நிரப்பிவருகிறது.துன்பங்களை போக்கிவருகிறது.தொய்வைத் துடைத்து வருகிறது. அதே சமயத்தில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க எந்நாளும்உழைத்துவருகிறது. மீண்டும் சொல்கிறேன், நேற்றைக்கும்சொன்னேன்,என் சக்தியைமீறியும்உங்களுக்காக உழைப்பேன்,உழைப்பேன்!

இந்த உதயசூரிய அரசு உழைக்கும் உழைக்கும்! என்று உறுதியளிக்கிறேன்.

இவ்வாறுமு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைஅமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்றஉறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், நந்தகுமார், கார்த்திகேயன், பொதுப்பணித் துறை கூடுதல்தலைமைசெயலாளர் தயானந்த் கட்டாரியா, ராணிப்பேட்டைமாவட்ட கலெக்டர்பாஸ்கரபாண்டியன், உள்ளாட்சிஅமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவையில் சிஆர்என்ஐ நிறுவனம் துவக்க விழா






கோவை, ஜுன்.30–
கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் முனைவோர்களையும், கட்டுமான பொருட்கள் உற்பத்தியாளர்களையும், அவற்றினை சந்தைப்படுத்துகின்றவர்களையும் ஒருங்கிணைத்து அவர்களின் வணிகத்தை பன்மடங்கு அபிவிருத்தி செய்து மேம்படுத்திடும் நோக்கத்தில், பரிந்துரை வணிகத்தை முன்னெடுக்க கூடிய வகையில் சிஆர்என்ஐ–கன்ஸ்ட்க்ரஷன் அண்டு ரியல்எஸ்டேட் நெட்வொர்க் ஆப் இந்தியா என்ற அமைப்பு கோவை லீ மெரிடியன் ஓட்டலில் சிஆர்என்ஐ நிறுவனர் மற்றும் சேர்மன் லிங்கராஜ் தலைமையில் துவக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக அகில இந்திய ரியல்எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனர் தேசிய தலைவர் டாக்டர் ஆ.ஹென்றி கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்.

மேலும் டாக்டர்.ஹென்றி பேசுகையில் சிஆர்என்ஐ நிறுவனத்தின் சேர்மன் லிங்கராஜ் மிகச்சிறந்த ஆளுமை. தலைமைப்பொறுப்புக்கு மிகவும் தகுதி படைத்தவர். அவர் செய்கின்ற பணி மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் அமையுமென்று பாராட்டிப் பேசினார். மேலும் அவர் முன்னெடுக்கின்ற பணிகளில் ஏற்றம் இருக்கும், இறக்கம் இருக்கும், மாற்றம் கூட இருக்கும், ஆனால் ஒருபோதும் ஏமாற்றம் இருக்காது எனவும் தெரிவித்தார்.

மேலும் உள்ளபடியே சிஆர்என்ஐ நிறுவனம் கட்டுமானம் மற்றும் ரியல்எஸ்டேட் தொழில் முனைவோர்களுக்கும், கட்டுமான பொருட்களின் உற்பத்தியாளர்களுக்கும் சந்தைப்படுத்துகின்றவர்களுக்கும் அவர்களின் வணிகத்தை மேம்படுத்துவதற்கும் வலிமை பெறுவதற்கும், வளம் பெறுவதற்கும், மிகவும் பயனுள்ளதாகவும், பாலமாகவும் அமையும் என்றார்.

தற்போதைய தமிழக அரசு கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் துறைக்கு ஒற்றை சாளர முறையில் அனுமதி உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் துறைசார்ந்த தகவல்களையும், தொழில் சார்ந்த நுணுக்கங்களையும் நிச்சயமாக இந்நிறுவனம் வாரம் மற்றும் மாதக் கூடுகையில் தமிழக அளவில் பெருநகரங்களில் இருக்கின்ற அனைத்து குழு உறுப்பினர்களிடையே நடைபெறுகின்ற கூட்டங்களில் ஏற்படுத்தும். அவர்களின் நட்பை பேணிக்காத்து வணிகத்தை பன்மடங்கு அபிவிருத்தி செய்வதற்கும் உறுதுணையாக இருக்கும்.

அதேபோன்று கடந்த 21 ஆண்டுகளாக தொடர்ந்து கட்டுமானத் துறையை பலவகையிலும் தாங்கி வெளிவரும் பில்டர்ஸ் வேர்ல்டு மாத இதழின் மூலம் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு வியாபார வாய்ப்புகளும் பெரிதளவில் பெருகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இந்நிறுனத்தின் வளர்ச்சிக்கும் உறுப்பினர்களின் வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்க கூடிய வகையில் அகில இந்திய ரியல்எஸ்டேட் கூட்டமைப்பு என்றைக்கும் தோழமையோடு சிஸிழிமி நிறுவனத்துக்கும் உறுப்பினர்களுக்கும் தோள் கொடுக்கும் என்ற நம்பிக்கையை தெரிவித்து விடைபெற்றார்.

நிகழ்ச்சியில் அகில இந்திய ரியல்எஸ்டேட் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் துணைத் தலைவர் ச.செந்தில்குமார், தியாகராஜன், பாலசுப்பிரமணியன், சுரேஷ்குமார், கண்ணன், மெடிக்கல் நாராயணன், பிரசன்னமணிகண்டன், பிரபாகரன், சங்கரநாராயணன், கிருஷ்ணமூர்த்தி, கார்த்தி, மோகன்ராஜ், கிரிஷ் உள்ளிட்ட பொறுப்பாளர்களும் 500க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### அய்யம்பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளியில்

# தேர்ச்சி பெற்ற மாணவ –மாணவியர்களுக்கு ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பாராட்டு



காஞ்சிபுரம், ஜுன்.30–
அய்யம்பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 100% தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மூலமாக பாராட்டு விழாவில் இப்பள்ளியில் படிக்கும் 100% சாதனை படைத்துள்ளது

மூன்று பள்ளிகளில் இந்த பள்ளியும் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஜி முகேஷ் என்ற மாணவன் 553/600 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும் பீ.ஷாலினி என்ற மாணவி 548/600 என்ற மாணவி இரண்டாவது இடத்தையும் டி.சதீஷ் 533/600 மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர் இப்பள்ளி 1963 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது இப்பள்ளியில் படித்த மாணவர்கள் பல உயர் அதிகாரிகளாகவும் மருத்துவர்கள் ஆகவும் வழக்கறிஞர் கூறும் பணியாற்றி வருகிறார்கள் .

இப்பள்ளியின் சிறப்பு அம்சம் வணிகவியல் பாடப்பிரிவில் எடுத்துப் படித்தவர்கள் இந்த மூன்று மாணவர்களும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சுந்தர மூர்த்தி மற்றும் பொருளாளர் மதன் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் ஊர் பெரியவர்கள் என அனைவரும் வருகை தந்து 100% தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பித்தனர்

உதவித்தலைமையாசிரியர் சண்முகம் நன்றி உரையாற்றினார் இதனை தொடர்ந்து மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வண்ணம் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் துணைத் தலைவர் உதவி தலைமை ஆசிரியர் அதிக சேர்க்கை சேர்க்குமாறு கோரிக்கை விடுத்தனர் அதனை கோசங்கள் எழுப்பிக் கொண்டு சென்ற பேரணி நடைபெற்றது

---

### கும்மிடிப்பூண்டியில்

# 10 வயது பள்ளி மாணவன் யோகாவில் உலக சாதனை




கும்மிடிப்பூண்டி, ஜுன்.30:
கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த, 10 வயது பள்ளி மாணவன், ஒருநிமிடத்தில், 32 முறை பாத குண்டலாசனம் செய்து, மூன்று உலக சாதனை புத்தகங்களில் இடம்பிடித்தார்.

கும்மிடிப்பூண்டி அடுத்த சாமிரெட்டிகண்டிகை பகுதியை சேர்ந்த நாகராஜ் நவநீதம் தம்பதியர் மகன் ரா.நா.ரவிகிருஷ்ணா, 10. அங்குள்ள மதன்லால் கெமானி விவேகானந்தா வித்யாலயா பள்ளியில், ஆறாம் வகுப்பு படித்து வருகிறார். கும்மிடிப்பூண்டியில் இயங்கி வரும் ஸ்ரீ சங்கரி யோகா பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், யோகா பயின்று வருகிறார்.

இவர், இருகால்களுக்கு இடையே உடலை முன் நோக்கி வளைத்து, பின்புறமாக தலையை மேல் நோக்கி பார்க்கும், பாத குண்டலாசனம் எனும் யோகாசனத்தை, ஒருநிமிடத்தில், 32 முறை செய்து உலக சாதனை படைத்தார்.

இவரது சாதனை, வேல்ட் வைட் புக் ஆப் ரெக்கார்ட்', அசிஸ்ட் உலக சாதனை', இன்டர்நேஷனல் புக் ஆப் ரெக்கார்ட்', ஆகிய மூன்று உலக சாதனை புத்தகங்களில் இடம் பிடித்தன.

சாதனை படைத்த மாணவன் ரவிகிருஷ்ணா, அவரது யோகா பயிற்சியாளர் சந்தியா ஆகியோரை சகமாணவர்கள், பள்ளி நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

---

### கும்மிடிப்பூண்டி

# தொழிலதிபர் சார்பில் 33வது நபருக்கு இலவச வீடு



கும்மிடிப்பூண்டி, ஜுன். 30–
கும்மிடிப்பூண்டியை சேர்ந்த தொழிலபதிபர் ஜெ.கிளமெண்ட் ஏழை எளியோருக்கு அவரது சொந்த செலவில் வீடு கட்டி தந்து வரும் நிலையில், அவரது சார்பில் 33வது வீடு புதுகும்மிடிப்பூண்டியை சேர்ந்த சசிரேகா என்பவருக்கு கட்டி தரப்பட்டு வீடு பயனாளிக்கு ஒப்படைக்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்தவர் பாரத் ஆக்சிஜன்ஸ் தொழிற்சாலை தலைவர் ஜெ.கிளமெண்ட். தொழிலதிபரான இவர் கும்மிடிப்பூண்டி பகுதியில் பல்வேறு நற்பணிகளை செய்து வருகின்றார். இவர் கடந்த 7 வருட காலமாக கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த ஏழ்மை நிலையில் கூரை வீட்டில் வசிக்கும் விதவை தாய்மார்கள், மாற்று திறனாளிகள், பழங்குடியினருக்கு ரூபாய் 1 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் வீடு கட்டி தந்து வருகிறார்.

கும்மிடிப்பூண்டியில் இது வரை 32 பேருக்கு இவர் வீடு கட்டி தந்த நிலையில், 33வது வீடு புதுகும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த சசிரேகா என்பவருக்கு கட்டி தரப்பட்டது. தொடர்ந்து அவருக்கு அந்த வீட்டை ஒப்படைக்கும் நிகழ்வு தொழிலதிபர் ஜெ.கிளமெண்ட், சிந்து கிளமெண்ட் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் புதுகும்மிடிப்பூண்டி ஊராட்சி தலைவர் டாக்டர் அஷ்வினி சுகுமாறன், செந்தமிழ்ச்சோலை நிறுவனர் விஜயரங்கன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தொடர்ந்து தொழிலதிபர் கிளமெண்ட் பயனாளி சசிரேகாவிடம் வீட்டின் சாவியை ஒப்படைத்ததோடு, அவருக்கு அரிசி. மளிகை பொருட்கள், பாத்திரங்கள் உள்ளிட்டவைகளை வழங்கினார் .



தேனியில் தமிழ்நாடு நாடார் சங்க மாவட்ட தலைவர் முருகேசன் தலைமையில் கர்மவீரர் காமராசர் திருவுருவ சிலை அமைக்க கோரி மாவட்ட ஆட்சியர் முரளிதரனிடம் கோரிக்கை மனு அளித்தார் சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்



கோவை மாவட்டம் ஆனைமலை தாலூகாவிற்கு உட்பட்ட காக்கா கொத்தி பாறை மலைவாழ் மக்கள் கிராம பொது மக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆனைமலை தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். தாசில்தார் பானுமதியிடம் பேச்சு வார்த்தை அளித்து ஆவன செய்து தருவதாக கூறியதால் அனைவரும் ஆர்ப்பாட்டததை கை விட்டு கலைந்து சென்றனர்

---

### படூர் ஊராட்சியில் 03 – 04வது வார்டில் தலைவர் கே.ஏ.எஸ். தாராசுதாகர் முன்னிலையில்

# 15வது நிதிக் குழுவிலிருந்து சுமார் ரூ. 4.63லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய பேவர் பிளாக் சாலை

## திருப்போரூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் இதயவர்மன் திறந்து வைத்தார்



திருப்போரூர், ஜுன்.30–
செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட படூர் ஊராட்சியில் 03வது 04வது வார்டு நடுவே உள்ள ஜெயராஜ் தெருவில் புதியதாக அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை திறப்பு நிகழ்ச்சி இன்று காலை 09.00 மணியளவில் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத்தலைவர் கே.ஏ.எஸ்.தாராசுதாகர் தலைமை தாங்கினார் .03வது வார்டு உறுப்பினரும், துணைத்தலைவருமான வனிதாசேட்டு, 04வது வார்டு உறுப்பினர் ரேகரசேகர் ஆகியோர்கள் அனைவரையும் வரவேற்றனர்கள்.

சிறப்பு அழைப்பாளராக திமுக கட்சியின் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளரும், திருப்போரூர் ஒன்றியக்குழு பெருந்தலைவருமான எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் கலந்துகொண்டு புதியதாக அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையை ரிப்பன் வெட்டி திறந்துவைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கி சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்.

இவருக்கு ஊராட்சி மன்றம் சார்பில் சால்வையணிவித்து பூங்கொத்து வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அனைத்து வார்டு உறுப்பினர்கள் படூர் மாற்றத்தை நோக்கி அறக்கட்டளை தலைவர் கே.ஏ.எஸ்.சுதாகர் , அறங்காவலர் சோகன் ,நிருவாகிகள் கட்சியினர்கள் பொதுமக்கள் எனதிரளாக கலந்து கொண்டனர்கள்.

இச்சாலையானது 15வது நிதிக்குழு, மானியத்திலிருந்து ரூ.4.63லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. வந்திருந்து கலந்துகொண்ட அனைவருக்கும் ஊராட்சி மன்ற செயலர் வாசுதேவன் நன்றி தெரிவித்தார்.

---

# கந்தர்வகோட்டை ஒன்றிய பெற்றோர்களால் பாராட்டப்படும் இல்லம் தேடிக் கல்வி திட்டம்




கந்தர்வகோட்டை, ஜுன்.30–
கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆடல், பாடல், விழாக்கள், கொண்டாட்டம் என சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு அவர்கள் தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் மற்றும் புதுக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலர் மஞ்சுளா ஆகியோர் வழிகாட்டுதலின் படியும், கந்தர்வகோட்டை வட்டாரக்கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி அவர்களின் ஆலோசனையின் படியும் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஆண்டியபட்டி, நாட்டானி, தட்சங்குறிச்சி, சமுத்திரப்பட்டி கொல்லம்பட்டி, மற்றும் சுந்தம்பட்டி குடியிருப்புகளில் உள்ள இல்லம் தேடி கல்வி மையங்களை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் பார்வையிட்டு கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை உற்றுநோக்கினர்.

தன்னார்வலர்கள் நாட்டாணி பாக்கியலட்சுமி, இலக்கியா, ஆண்டியபட்டி தீபா, திருமலைச்செல்வி, சமுத்திரப்பட்டி இளவரசி, தட்சங்குறிச்சி ஆரோக்கிய பிரதீபா, மரியலீனா, கொல்லம்பட்டி அகிலா, முருகேஸ்வரி மற்றும் சுந்தம்பட்டி காஞ்சனா, பிரியா ஆகியோர் மூன்றாம் கட்ட கற்பித்தல் உபகரணங்களைக் கொண்டு தமிழ் மற்றும் ஆங்கில வாசிப்பு பயிற்சி, எளிய கணித செயல்பாடுகள் போன்றவற்றை உற்சாகத்தோடு கற்பித்து வருகின்றனர்.

பார்வையின் போது, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் இ.தங்கராசு மற்றும் அ.ரகமத்துல்லா ஆகியோர் தன்னார்வலர்களை பாராட்டியதுடன்,

தன்னார்வலர் பெற்றோர் வாட்ஸ்அப் குழு உருவாக்கம், ஊக்கத்தொகை பெறப்பட்ட விபரம், மையங்களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட விவரம், பள்ளி மேலாண்மை குழு பங்கேற்பு மற்றும் பள்ளிகளில் உள்ள கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல் போன்ற விவரங்களைக் கேட்டறிந்தனர்.

மாணவர்கள் மாலை நேரத்தில் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும் இல்லம் தேடி கல்வி திட்டம் பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது..

---

### காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# குடிநீர் குழாய் இணைப்பு நிலுவைத்தொகை வசூலிக்க சிறப்பு முகாம்

காஞ்சிபுரம், ஜுன்.30–
ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ஒருநபருக்கு ஒரு நாளைக்கு 55லிட்டர் வீதம் தரமான சுத்தமான குடிநீர் வழங்கி, குடிநீர் பெறுவதில் 2024 ஆம் ஆண்டிற்குள் தன்னிறைவு பெற்றதாக அறிவிப்பதே திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ், 2021க்குள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 5 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 272 கிராம ஊராட்சிகளில் 1350 குக்கிராமங்களில் அனைத்து வீடுகளுக்கும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 55லிட்டர் வீதம் தரமான சுத்தமான குடிநீர் வழங்குவது மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகள், அங்கன்வாடிகள், பொது நிறுவனங்களுக்கும் தரமான குடிநீர் வழங்குவதே நம்மாவட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். மத்திய அரசின் 45% பங்களிப்பு, மாநில அரசின் 45% பங்களிப்பு மற்றும் பொது மக்களின் 10% பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 202021 நிதி ஆண்டில் 116783 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 223 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், 458 ஆழ்துளை கிணறுகள், 49 திறந்தவெளி கிணறுகள் 104 பம்ப் ரூம்கள், 897.76 கி.மீ குடிநீர் பைப்லைன் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களின் 10% பங்களிப்பு தொகை( ஒரு குடிநீர் குழாய் இணைப்பிற்கு பொதுபிரிவினர் ரூ.1500/, ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பிரிவினர் ரூ.750/ )பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் முழுமையாக வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்த நிலுவைத்தொகையினை வசூல் செய்ய 02.07.2022 சனிக்கிழமை அன்று சிறப்பு முகாம் நடத்திட மாவட்ட நிர்வாகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்காணும் சிறப்பு முகாமில், ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து ஊராட்சி ஒன்றிய களப்பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்று முகாமினை சிறப்பாக நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலடங்கிய அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள மக்கள் பிரதிநிதிகள் பங்கெடுத்து பொதுமக்களை ஊக்கப்படுத்தி பங்களிப்பு தொகையை செலுத்த முன்வருமாறு நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Owned-Published and Printed by : G.KATHIRVEL Published from 4/17, Grey Nagar, 3rd Street, Pulianthopu, Chennai - 12 and Printed by him at MEERA OFFSET PRINTERS, 104, V.R. Pillai Street, Triplicane, Chennai - 600 005. Editor : G.KATHIRVEL CELL : 8190933331
அலுவலக தொடர்பு : 167/88, இரண்டாவது மாடி, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, புரசைவாக்கம், சென்னை – 600 007. தொலைபேசி : 044–42693609 மின்னஞ்சல் : maalainews.editor@gmail.com